[29th July 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் படிக்க வேண்டும், படிப்புக்குத் தடை ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில்தான் சென்றமுறை குற்றம் செய்தவர்களை எல்லாம் கூடச் சேர்த்து எல்லா மாணவர்களையும் அரசாங்கம் விடுதலை செய்தது. ஆனல் இந்த மாணவர்களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கு படிப்பில் அக்கறை இருப்பதாகக் காணும். மாருக கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றே ஈடுபடுகிருர்கள். ஆகையால் இவர்களுடைய படிப்பு பாதிக்கப்பட்டால் அதற்கு அவர்களேதான் பொறுப்பு. அவர்களுடைய பெற்ருேர்கள் பொறுப்பு.

திரு. து. ப. அழகமுத்து : பாதுகாப்புச் சட்டம் பழிவாங்கும் முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற எண்ணம் பொதுவாக இருந்து வருகிறது. அந்த எண்ணத்தைப் போக்க சிறையில் வைத்திருப்பவர்கள் மீது அரசாங்கம் வழக்குத் தொடர்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினரைவிட ஆற்றல் மிக்கவர்கள் எல்லாம் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். கனம் அங்கத்தினர் சொல்கிற கருத்தை அவர்களே வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருக்கக் கூடியவர்களிடமிருந்து இன்னும் சில வசதிகள் செய்து தரவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அந்தக் கோரிக்கைக்கிணங்க அந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு சில வசதிகள் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து என்ன என்ன வசதிகளைப் பெருக்க வேண்டுமோ அவைகளை அரசாங்கம் பெருக்கும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, பேராசிரியர் இலக்குவனர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மட்டும் வேலையைவிட்டு நீக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். வேறு என்ன காரணங்களுக்காக வேலையில் இருந்து நீக்கப் பட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தக் கல்லூரி நிர்வாகிகளிடம்தான் அதைப்பற்றிக் கேட்கவேண்டும்.

26—1—1965-ம் தேதி அரசாங்க பஸ்களுக்கு ஏற்பட்ட சேதம்

* 25 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 26—1—1965-ம் தேதி, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய துக்க தின ஆர்ப்பாட்டத்தை ஒட்டி எத்தனை சர்க்கார் பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன ?

(இ) அதனல் ஏற்பட்ட மொத்த நஷ்டம் எவ்வளவு ?

29th July 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Excluding minor repairs, 199 buses and 2 lorries of the Madras State Transport Department were damaged during the disturbances from 25th January 1965.

(*b*) The damages are estimated at about Rs. 1,77,018 initially. The loss on account of the stoppage of services is estimated at about Rs. 8.50 lakhs.

திரு. சா. கணேசன் : இப்படி பஸ்களுக்கு அல்லது லாரிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் எந்த எந்த ஜில்லாக்களில் எத்தனை எத்தனை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பெரிய லிஸ்டாக இருக்கும். தனியாகக் கேள்வி போட்டால் அச்சிட்டு சபை முன்பு வைக்கிறேன்.

சில குளங்களை மணிமுத்தாறு திட்டத்தில் சேர்த்தல்

* 26 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, விஜய நாராயணம் பிர்க்காவிலுள்ள இலந்தைகுளம், வேப்பங்குளம், பாப்பாங்குளம், கன்னார்குளம், பாகநேரி, காரிகுளம், சவளைக் காரன்குளம் ஆகிய 7 குளங்களை மணிமுத்தாறு திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று அக்குளங்களின் பட்டாதாரர்களிடமிருந்து கோரிக்கை 1962-63 வருடங்களில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) *and* (*b*) Representations have been received for the inclusion of 19 tanks under the Manimuthar Project including the following six taks, viz :—

(1) Veppankulam,
(2) Pappankulam,
(3) Kannarkulam,
(4) Paganerikulam,
(5) Kariakulam, and
(6) Sevalakarankulam.

The question of inclusion of these six tanks is under the consideration of Government. There is no mention of Elandaikulam in the representation. It is reported that there are two tanks by name Elandaikulam and both are situated on the uncommandable side (right) of the Manimuthar Canal.